2. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 25 (1)-ன் இரண்டாவது காப்புரையின்கீழ் பேரவையை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன் இரண்டாவது காப்புரையின்கீழ் பேரவை இத்துடன் ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 5-4-2010 அன்று கூடும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் திங்கட்கிழமை (5-4-2010) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 9-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.